406

ஷண்முகன்துணை.

கருப்பண்ணசாமி கீர்த்தனை.

(முதற்பாகம்.)

விலை அணா 6.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

1929.

O2998 :.417
N29
148862

...னஸ்வரி அச்சுக்கூடம்.

ஓம்

ஷண்முகன் துணை.

கருப்பண்ணசாமி

கீர்த்தனை.

(முதற்பாகம்.)

இஃது,

கள்ளக்குறிச்சி தாலுக்கா சங்கராபுரம்,

கோ. வெங்கிட்டசாமி நாயுடு குமாரர்,

(கருப்பண்ணசாமி நாயுடு,)

இயற்றியதை

ஷை யூரிலிருக்கும்.

வை. குப்புசாமி நாய்க்கர் குமாரர்,

வி. கே. வைய்யாபுரி நாய்க்கர்

அவர்களால்,

சென்னை புவனேஷ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

தன் விலை] 1929. [அணு-6.

உ

சிவஷண்முகன் துணை.

கருப்பண்ணசாமி

கீர்த்தனை.

விநாயகர் துதி.

வெண்பா.

ஆலமுண்டவீச னளித்தச்சீர்பெருமா
வேலவன்மேல்கீர்த்தனைப்பா வியற்றிடவே-கோலஞ்சேர்
குணமதிகமே பெருகுங்கோருமருளேதருகுங்
கணபதியி னிணைபதமே காப்பு.

வேறு விருத்தம்.

திருதர்படைகளுமடியபடைவிடு திகரில்முருகனைநினைவுட
ஊருதிபெறபுவியரியதுதிமிக நவிலுசெந்தமிழ்புனையவே
பொறுதுமைவரின்சரிதமது முனிபுகலவெருதியபுனிதனி
னிருகழல்றனைதொருது மனதுடனேற்றியஞ்சலிசெய்குவாம்.

தேவிமீனாக்ஷி தபம் என்றமெட்டு.

பல்லவி.

வாவாகணேசநாதா வாதிதேன்சதா சம்போ (வாவா)

அநுபல்லவி.

காவாய் லம்போதராதயை கருதினேன் துதியே
காதல்மீரும்வாதை தீராத்திட ததியே

(சு) காதகரோடுவாடினேன் கவலையதால்மனம்வாடினேன்
பாதகமேபலதேடினேன் பதமலரினைசிரஞ்சூடினேன் வா

ஆராதரப்ரணவஸ்ரூபா அழியாசுடர்தீபா சம்போ
ஆவலோடுசேவைதாரும் அமலப்ரதாபா

(சு) அண்டிடுமூஷிகவாகன அம்பிகையருள்ஜெகமோகன
தொண்டர்கள் துதிபுரிபாகுண தூயனேகருப்பண்ண
[நேர்தினம் வா

இதுவுமது.

(சு ஜ ன ஜீ வ ந)

கரிமுகநாதா மலர்க் கழலிணிதாதா தேவா
சிரியன் மேல்வாதா தியானம் செய்வதுந்தீதா
சிதைவுன்னிடும் பிறவித்துயர்
தீர்த்திடும் பாதா தேவா கரி

சங்கரிகுமாரதீர சதிர்பெருமாரா
துங்கன்கருப்பண்ணன்போற்றும் துரையேசிங்காரா

ஐங்கரப்பேரா ஞான மணிக்குமுதாரா
அளவிற்றமிழ்க்கவியைத்தினம் ஆளும்விஸ்தாரா தேவா (கரி)

கலைமகள் துதி.

வெண்பா.

வேதன்பத்தினியே வெண்டாமரையாளே
போதம்நல்கும் பொற்கொடியே-பூதலத்தில்
செந்திக்குமரன்மேல் செப்பிடநற்கீர்த்தனங்கள்
சிந்தைமகிழ்ந் துந்தனருள்சேர்.

கருணையருள்வாணி சார்கமலவேணி கரு
தருணமென்தாயே தயைபுரிவாயே
தமியனுந்தன்சேயே தான்வருவாயே கரு
புத்தகப்பாணி புகழுங்கல்யாணி
புதுமையுடன்தோணி பொற்பதம்தானி கரு
செந்தமிழ்வித்தே செகந்துதிமுத்தே
செழுமையுன்சத்தே தேர்ந்துமனத்தே கரு
நான்முகன்தேவி நம்பினேன்மேவி
நாரினமுறைக்கூவி னேனுனைத்தாவி கரு
கருப்பண்ணதாசன் கவிபுனைநேசன்
கருதுவிசுவாச ஞானவிசேஷன் கரு

திருமால் துதி.

விருத்தம்.

கொண்டல்மாமேகவண்ணன் குறைகடல்துயின்றசோதி
தண்டுளவணியுந்தேவன் தாமரைமகட்குநாதன்
எண்டிசையனந்தபாத னெழில்பெருமாதிமூலன்
அண்டர்கள்புகழுங்கோமா னமலன்றாள்பணிவமாதோ.

(என்ன கேள்வி முறை என்ற மெட்டு.)

வாதிதேனய்யா வாமனகிருபாகார இனி வாதி

வந்தாளுன்பாதந் தந்தாலென்னிட
சிந்தாகுலமறும் தேவகியாள் வாதி

தருங்கோவலனே எனதாவல்தீரநிதமேவிவரமருள்
தேவாஎந்தன்முன்வாவா இத்தறிகாவாயெந்தன்மேல் வா

கஞ்சனெனுமாமன் நெஞ்சங்கலங்கிட
வஞ்சமுடனழி மிஞ்சிவிடுத்தவா
கண்ணாசாமளவண்ணா ஈதெல்லாம் நண்ணுசெய்வது வா

பூதகியாள்முலை வாதைப்படவுண்ட
காதகனே திருமாதுமருவிடும்
புண்யாவாருமலாவண்யா காத்தருள் தண்யாசந்ததம் வா

நித்தமுனைப்பணிபக்தன் கருப்பண்ணன்
சித்தங்களித்திடுங் கொற்றவனேமறை
நீதாமாமலர்பாதா உனதருள்தாதா இன்னமும் வாதி

பரமசிவ வணக்கம்.

விருத்தம்.

இளிமதியுந் தண்புனலுஞ் சிரஞ்சூடி
மழுமானு மிருகையேந்தி
யுளமுடன்தன்னிடபாக முமைக்களித்து
மாதங்கமுரித்து போர்த்து
அளவிட்முன்னயன்மாலு மறியொணு
தழலுருவா யமர்ந்தசோதி
வளமிகுமாபதமலரை வழுத்துபவர்
கலிஎன்னும் வறுமைபோமே.

(கடவுந்தன்சேயா கார்த்திகேயா என்ற மெட்டு.)

விடாகம்பூண்மெய்யா விமலகிருபாகரா
விளமதிமழுமானேக் திலகுந்தயாபரா
அடமிடுவதழகாமோ துயர்போமோ
அன்புளானே ஆளுங்கோனே
ஆவிநிலைசோர்ந் தலைந்திடும்போது
அப்பனேயான்மறந்தால் பயனேது

கூவிகூவிமுறைகூருமிப்போ துகுறைதீரவா மனஸ்தாபமேனோது
குருகும்பிறவிமருகிடும்பூமேலிருவினை தீர்க்கவருகுவாயோடி ()

தோஹைரா.

சிவாதற்பராசங்கராசம்போ சின்மயானந்தபரனே
சிலமாயுமையவட்கிட்பாகமீய்ந்திடுஞ் செஞ்சடாடயோகனே
சினமுடன்மதனுருவழித்திடும் கண்ணு
சேயனுங்கருப்பண்ண னழைத்திடுந்தன்யா.

சிவ தண்டாயுதக்கடவுள் பேரில்

எண்சீரடி விருத்தம்.

திருமகிழுநாதனுஞ் சதுர்மறையின்வேதனுந்
தேவரொடு சித்தர்கணமும்
தேனுமிழ்கொன்றையணி ஈசனும்சுரர்பதியும்
செப்பரிய முதலாகமம்
கருதுமெழில்பூசுரர் குறையாதுசெய்ததோர்
கருணைபெரு தவமகிமையால்
காக்ஷியுடன்சரவணப் பொய்கையதிலுருவாகி
கார்த்திகைமாதர் தம்மால்
உருகுமாமுலையுண்டு அருவுருவமாய்வளர்ந்
தொப்பிலா சத்தியருளு
முற்றவேல்விட்டவுணர் படைவென்றவீரனே
உம்பர்புகழ் கெம்பீரனே
தருகவரமயிலேறி வருவாய்கருப்பண்ண
சாமியிசையே யணிந்த

தற்பரானந்தசிவ விற்பனவிசாலகுக
தண்டாயுதக் கடவுளே.

சிவ சுப்ரமண்யர் பேரில்.

(மதுராபுரி ராணி மாதுமையே என்ற மெட்டு)

வடிவேலுடன் வருவாய் ஓ முருகா வடி
வந்தித்தேயுனை சிந்தித்தேனிதம்
சந்தித்தாளவே கந்தக்குமரனே வடி
வாதித்தால்புவி மீதிற்றுணையிலே
சோதிதாற்றய ரோதர்க்காகுமோ வடி
வருமாபிறவியு மறவேயுனதிரு
பதமேயுனமொடு தரவேததியிது வடி
வந்துவந்து பிறந்து பூமிசை
சிந்தையுங்கசிந்து நொந்தேன் வடி
வாரிட்டணிமுலைவஞ்சியர் நேரிட்டவர்பால்மையலே
கோரிப்படிமிசையுனதருள் தூரிக்கெடமனம்வாடினேன் வடி

சரணம்.

படியினிலாண்டிட கொடியதுமிலையோ
பதமலர்தனை பணிந்திடவரமதுதா வடி
சதிர்பெருகுமரகத மயில்மிசையேறி
யிதமுடன்கருப்பண்ண னிசைக்குந்தமிழுக்கினி வடி

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என்ற மெட்டு.

பல்லவி.

ஷண்முகம் ஷண்முகம் ஷண்முகமே சிவ
ஷண்முகம் ஷண்முகம் ஷண்முகமே

அனுபல்லவி.

கண்யமிகும் பிரகாசமே நன்மைதருவிஸ்வாசமே ஷண்

சரணம்.

நீலமயில்தனிலேரு முல்லாசன்
நிருதர்குலத்தை யழித்திடுநாசன்
கோலம்பெருந் தணிகாசலவாசன்
குன்றுதோறும்நின்றகுகன் நன்றிதருகின்றசிவ ஷண்

பிர்மனைகுட்டிசிறையிடும் தீரன்
பித்தனுக்குமறை புகலுமுதாரன்
வர்மமிலாதுருவான சிங்காரன்
வண்டர்முதல்மண்டலருங் கொண்டுதொழுமன்பர்பணி ()

பாவைக்குறவள்ளி மாதுபங்காளன்
பாரிற்கடம்பணி பன்னிருதோளன்
சேவைபெருகும் சிறந்திடும்தாளன்
செந்திருவும்புந்திமகிழ் கந்தனெனும்சுந்தரனும் ஷண்

ஏமன்கிடாவினிமேலறி வந்தாலே
ஏதுதுணையிந்த பூதலமேலே
தாமதமேன் கருப்பண்ணனென்பாலே
தந்துகவிவிந்தைமிக சந்ததமும்சிந்தைமகிழ் ஷண்மு

சாமிமலை ஷண்முகதேவா என்ற மெட்டு.

நீலமயிலேறிடும் வேலா நித்யானுகூலா நீல
கோலம்பெருஞ்சுசீலா குகனேபன்னிருதோளா
ஞாலமதிலெந்தனையாளாய் நம்பினேனுளாய் நீல
நாரியர்களாசைப்பட்டு நானலைந்தேனேகெட்டு
பாரினுந்தன்னருளினைதொட்டு பணிவாய்முன்னிட்டு நீல
தாருகனுடல்பிளந்தாய் தாரணியிலேசிறந்தாய்
பாருமெனையாளமலைந்தாய் பரிவேதுரந்தாய் நீல
ஒப்பிலாதிலகும்பூமி ஓதுங்கருப்பண்ணசாமி
செப்பிடும்தாயபிராமி சேயனேநேமி நீல

போகர்மலை தெய்வமே என்ற மெட்டு.

சேவற் கொடியாளனே உந்தன்
சேயன்போற்ற வரமீயும்தாரனே சேவ
தேவர்சேனபதியான கெம்பீரா
திக்குவேறே தினிமாமலர்தாரா
ஆவல்கொண்டாள் குறமான்மகள்மாரா
அடியர்க்கருணைக்கடலே முருகக்கடவுளேயிதுதகி ()
மாயப்ரபஞ்சத்திலே நானும்
வாடிஓடிமனம் நாடினேனய்யனே மாய
தாயர்தமர்சுற்றத் தாரெனை வெண்ணி
தாங்கிகாணுத்துயர் மேவிடவேகுண்ணி

வேயமுட னுந்தன் சேவைதனை நண்ணி
நினைவுற்றனுதினமுனதடி யிணையிற்பரிவுடனனுகினேன் ()

சரவணத்தாமணியே சிவ
சாம்பவிகாதலனர் மகிழ்சோதியே சா
மரகதமாமயிலேறு முல்லாசா
மாற்றுயரேபெரும் வேலேந்துமீசா
வரமருள் கருப்பண்ணசாமி நன்னேசா
வருகப்படிமிசைமறலியும் குருகிற்றமல சகித்தி சேவ

மன்றுளாடியவா என்ற மெட்டு.

செங்கண்மால்மருகா—முருகா செங்
கானும்சங்குசக்ரமுந் துலங்கும்
செந்திருவுளங்கனிந்த செங்

சங்கரனர்க்குபதேச மொழிந்தவா
சதுர்முகனைசசிரையிட்டு முனிந்தவா
மங்களமேபெரும் செந்தியில்நின்றவா
மருவிடுங்கடம்பணிதேகனே குறமகள்மணந்தவைபோகனே ()

நீரிற்குமிழிபோல் நிலையற்றதிரேகம்
நீடுழிஎன்றெண்ணிக் கொண்டுமேனகம்
பாரில்புரிந்த பழிகளமோகம்
பலதுயரடைவதும்வசமல விலகிடும்வழியெதுமறிகிலன் செங்

பத்தினிமாரிருவர் செய்தமாயமோ
பாலன்முறைகேளா திருப்பதுஞாயமோ

பக்தன்கருப்பண்ணன்மீ திது சேயமோ
பரிவுடனிலகிடுமோகத மயில்மிசைவிரைவுடனெதிர்வர செவ்

எண்சீரடி விருத்தம்.

கவனமொடுமுனதுதுதி செய்துமரியேனிடரை
கருதியொரு நாளுமறியேன்
காய்கினமொழித்துபல வாய்மதமழித்தொளிரும்
கருணைபெருவழியு மறியேன்
பவசாகரத்தினை தீர்க்கவறியேனென்றும்
பாரில்மெய் பேசியறியேன்
பண்புசேர்சர்ச்சனர்களுறவு மறியேன்கொடிய
பாவையர்களிழிவு மறியேன்

குவலயந்தனிலெனதுமனதார ஓரணுவும்
குற்றமில்லாது மறியேன்
கூற்றுவன்புவியதிர கிடுகிடெனபகடேறி
குருகிவரிலேது செய்வேன்
தவமதுபுரிந்துபலனறியேன் கருப்பண்ண
சாமியிசையே யணிந்த
தற்பரானந்தசிவ சிற்பனவிசாலகுக
தண்டாயுதக் கடவுளே.

அற்புதம் அற்புதமான ரப்பர் தோட்டம் என்ற வர்ண மெட்டு.

கானக்குறமகள் மோகனரஞ்சித கந்தாஷண்முகா
காவலனேநிதம் காவலர்போற்றும் கர்த்தனேகுகா
ஞானக்குருபர தேசிகனுகிய நல்லருமுகா
கண்பன் கருப்பண்ணன்றுதி நாடிடும்சுகா
நாரணன் மா மருகோனே
உனை நாடினேன் வா சிமானே
வாரணம் வரச் செய்தோனே
இவ்வாதினியேன் பூமானே
வந்தித்தேன் சந் நித்தே
வந்துன்ருள் தந்திட்டால் கான

செந்தாழம்பூ வுந் தேனுங்கமழ் என்ற மெட்டு.

கண்பாருங் கழற்றந்தாளும்சிவ
கண்யனே சுப்ரமண்யனே
வண்டாருங்குழல் குறத்தி
பெண்டாளுக் குகந்தவனே

வனமடுத்தவ னிணங்கிடத்திரு
வுனமொடுப்பல விதம்நடித்தவா கண்

நஞ்சாகும்விழியுந் தாமம்புனே
நாரியர் வசமாகியே

அஞ்சாதுணைமறந்தேன் நெஞ்சாவினிசிறந்தேன்
அறிவகற்றியே விறகொடித்தரை
பரிவொடேற்றினி சிறுவனுக்கருள் கண்

அன்றுட்டம் பலருக்கூடும்புக
ழூருணையம் பதிவானவா
நின்றுடுக்தேவடியார் கொண்டாடுங்காவடியார்
நினைத்தசந்தியி லெனைக்கருதிடா
திருப்பதி துனக்கடுத்திடும்பழி கண்

எந்தாயம்பிகை மைந்தாசந்ததம்
யேற்றினேன் துணை போற்றினேன்
சிந்தாகுலமருப்பாய் கந்தாகருப்பண்ணன்சொல்
சிதரவிட்ட லருவருப்புட
னுருதிபட்டிடும் சமரசற்குரு கண்

உன்னைபோலொரு பெண்ணை கண்டதில்லை.

என்ற வர்ன மெட்டு.

ஷண்முகா உன்பாதசேவைதா—சிவ
சரவணபவகுககுருபர வரமருள்புரிந்திடயிதுததி ஷண்

கண்பமோ ப்ரகாசவேஸ
கார்த்தருளாதேன் சுசீலா
தண்பனே மறைவிசாலா
தானவர்க் காலா

தகுதரிகிட தகுதாவென ததிமிதனம்த்ரிதோமென
தககணணும்தரி தோம் தோம் தகிங்கிணவெனநடமிடும்சிவ ()

தங்கமயில் மீதிலேறி
தமியேனென்னை யாளவாறி
சங்கையேனோ கேரில்கோறி
சார்ந்திடப் பாறி

தச்சம் தகஜேம் தகதிக தளங்குதித்தரி தீம் தீம்
தாகிண ஜேகிண தகதோம் தத்தளாங்குதோமென்றுடிய ஷண்

பாலன்கருப்பண்ணன் கீதம்
பார்த்தால் துயரேகும்நீதம்
ஜாலம்செய்வதோ வநீதம்
சகிததிடா வாதம்
பகலவனொளியு மிழுடுபடை
கிடுகிடுவென விட்டெதிரிகள்
கொடுமனதுடன் களமதில்பட
சமர்வென்றிடு மறுமுகசிவ. ஷண்

தெரிசன மென்ஜென்ம சாபல்யமாமுன்

என்ற வர்ண மெட்டு.

குருபரனே குமரகுகா ஷண்முகா குரு

மால் மருகா வேல்முருகா மனமிருகா
இனுமுருகா தேனே குரு

நிருதர்குலமே யழித்த — நீலமயில்வாகனு
நித்தியமுனைத்தழுவும் ஞான வள்ளிமோகனு
நெடியவேலவா எனைகொடியிலாளவா

திரு நேர்மாமதில்கள் சூழ்ந்திடும்
கார்மோதிடுந் தணிகையம்பதிவளர் குரு

சதுர்முகனைக் குட்டிச்சிறைதானடத்துங்காவலா
சங்கரன்செவிக்கிமறை தேன்புகட்டும்பாவலா
சரவணபவா கழற்றுனுதவ வா

திகழ் சடமேவிய புவிமீதினி
லடையாவிதமது புரிந்திடவரும் குரு

அண்டர்புகழ்கொண்டதேவ நீலகண்டன்புத்திரா
அண்டியேனுனைப்பணியுந் தொண்டர்க்கொருமித்திரா
ஆறுமுகனே சுரர் கோகுஞ்சுகனே

துய ரணுகாவிதமுனையே நிதந்
தமியேன் கருப்பண்ணன் போற்றிடுங் குரு

ஆவிசோருதே மாதவா அல்லியானேன்னுமாதினுல்

என்ற வர்ன மெட்டு.

ஆவினன்குடி வேலனே—எனை
யாண்டருள்குண சீலனே
ஐயாமுருகையா கிருபை செய்யா யொளிர் துய்யாதிரு ஆவி

சேவலங் கொடி யாளனே—புகழ்
சேரும் பன்னிரு தோளனே
சேரா யருள் தாராய் சுகு மாரா குண தீரா திரு ஆவி

காளகண்டன் புத்திரா—உனைக்
கருதுவர்க்கொரு மித்திரா
கண்யா கா ருண்யா லா வண்யா சுப்ர மண்யா திரு ஆவி

பாவிகளுற வாடினேன்—கொடும்
பாதகம் பல தேடினேன்
பண்பாயினி என்பால்வர வன்பாயெனைக் கண்பார் திரு ஆவி

நாரணன்மகிழ் மருகனே—நிதம்
நாடிட வரு மருகனே
நலமாய்; துதி பலவோதியே நிலையாய்கருப்பண்ணன்பணி ஆவி

துடிக்குமயிலில் நடிக்கும் புண்ணியனே என்ற மெட்டு.

செழித்துசந்தனக் தழைத்தசெந்தியிலே—எந்நாளுமுந்தன்
சேவைபெற்றிட களித்தேன் புந்தியிலே நின்
சேயனெந்தன்மேல் நேயமுற்று
அபாயமற்று சகாயம்பெற்றிட
சிரமதைக் குனிந்திரு கரங்குவித்தேன் சிந்தை மெலிந்து
சீர்மிகுந்திடும் பதமலர் துதித்தேன்

சூரின்குலம் வேரறமடித்தாய் சூதாகுமிந்த
சூழ்புவியினி லேயெனை விடுத்தாய் திரு
சூலிபெற்றிடு லோலனே மறைமூலனே
கதிர் வேல் துலங்கிடுஞ்
சுகிர்தமிஞ்சிய குகனெனுந் துய்யா சோதிமிகுந்த
தூயனேயருள் பன்னிருகையா
குறமகள்தனை மருவுஞ்சுந்திரனே குன்றுகள்தோறும்
கோதிலாம விலகுந்தந்திரனே பரன்
கூறிடமறைதேரிட் உரையாடியே புகழ்
நீடிய வெழில்
குலவு மயிலினிலையுடனேரில் வந்தாளவென்று
கோடிமுறையில் கூவினேன்பாரில்
கடம்பணிந்திடுங் திடம்புகல்தீரா கருப்பண்ணதாசன்
கவலையற்றிட்செய்திடு மாரா கொடும்
காலன்வந்திடுவேளையுந் துணை
வேலனென்றிட நான்மறப்பனோ
கருத்துடனுனைத்துதித்திட ததியே இனிமேலெனக்கு
காசினிதனி லுன்பதங்கதியே (செழித்து)

சென்று கனிபரித்துக்கொண்டு என்ற மெட்டு.

செந்திலமர்ந்த குகநாதா
சீர்மிகுந்திலகு மலர்ப்பாதா
வந்தெனையாள வொண்ணாதா
வரமுதவும்தாதா வளரும் துதிநீதா
வாதினி செய்வதுவும் சூதா (செ)

அண்டர்களிடுமுறையைக் கோரி
ஆக்ரமித்தவுணர்களைத் தூரி
தெண்டிரைபுவியில் ஜெயமீரி
ஜெயித்தவதிகாரி சகல உபகாரி
சேவலங்கொடியசைய வாரி (செ)

சரவணப்பொய்கைவரு மிறையே
சர்ஜ்ஜனர்களிக்குமெழில் துரையே
பரமனுர்க்கரிய சர்க்கரையே
பதமளிக்கும்நிதியே பகருமதிபதியே
பாசாங்குபுரிவதினி சதியே (செ)

கண்பனுங்கருப்பண்ணனுந் தேடி
நாவினலருங்கவியைப் பாடி
இன்பமாயநுதினங் கொண்டாடி
இளகிமனம்வாடி இசைக்குந்தமிழ்சூடி
இத்ததிவாருமென்றே னடி (செ)

விருத்தம்.

காருமுருகா பவம் தீருமுருகா கொற்ற
கரியமுகில் மெச்சு முருகா
கருணைமுருகா தேவர் கருதுமுருகா தினங்
காக்ஷி யுருவான முருகா
வாருமுருகா குறவர் வஞ்சிமுருகா வயனை
வஞ்சிறையி விட்ட முருகா
வளருமுருகா செந்தில் வாழுமுருகா நாளும்
வர்மமில் லாத முருகா
நேருமுருகா அடியர் நேசமுருகா பரன்
நிகரில்மறை யோது முருகா
நெருநெரென புவியதர வடிவே லெடுத்தவுணர்
நீள்பகையை வென்ற முருகா
தாருமுன தடிமலரைப் போற்றிடும் கருப்பண்ண
சாமியிசையேய ணிந்த
தர்ப்பரா னந்தசிவ விர்ப்பனவி சாலகுக
தண்டா யுதக் கடவுளே.

சிறைக்குள் புகுந்துமனமே களிப்படைய என்ற வர்ன மெட்டு.

குமரசர்க்குரு நாதா சேவற்கொடி
கொஞ்சிடும் நவநீதா பிரக்யாத

சமமில்லாமலர்ப் பாதா வருகுமிடர்
சார்ந்திடாதருள் தாதா விநோதா (கு)

தோஹைரா.

கங்குலெனும் பிறவாழி கரைகாண முடியாது
கவலையால் மனது நொந்தேன்
தங்கமயில் மீதேறி வருகுவா யென்றுனது
தாளிணையிலே பணிந்தேன்.

சரவணத்தொளிர் பாலா அடியர்குறை
தவிர்த்திடச்செய் மூலா சுசீலா
பரவிடுமனு கூலா குறவரிள
பாவைக்குகந்த லோலா குணாளா (கு)

தோஹைரா.

தசமுகன் கிளையோடு மாளசெய் ராகவன்
தன்மன மகிழ்ந்த மருகா
வசமிலைப் புவிமீதி லப்வாத ஞகினேன்
வந்தித்த வாறுமுருகா.

முத்தமிழ்க்கொரு நிதியே கருப்பண்ணன்
மொழிவதுமுன் துதியே ததியே
பக்தியிக்கதி பதியே சர்ச்சனர்
பரவிடும்பதங் கதியே மதியே (கு)

மரகதமயிலேறியே எதிர்வருவாய் மால் மருகா
முருகா விரைவாக என்ற வர்னமெட்டு.

முருகாசரவணபவனேமுராஹரி மருகா
வரமருள் புரிகுருபரசிவ
பெருகா தடர்வினை யறவேயுனதடி
பெற்றிடவித்தரை யிற்பரிவுற்றொளிர் (முருகா)

குமரா துறவாடிய குமராததி
குகனேகுருமுனி தொழுமா தமிழணி
பரமேயுனதக மகிழ்வாயெனதிட
பத்தியினத்திடுமுத்தம கீர்த்தன (முருகா)

சதமாகிய விரு மட்வார்தருமொரு
சதியோமுன் தவசுதியோ யுமைதரு
சுதனுகிய திருதணிகாசலமுறை
சுந்திரமந்திர கந்தகடம்பணி (முரு)

படிமீதடுசுடர் வடிவேலொடுபடை
படவேயவுணர்கள் கெடவேசினந்தணி
அடியார்சுகமூறு முருவே கருப்பண்ண
னற்புத சொற்பெறு விற்பனதற்ப (முரு)

ரகுராமா சுகநாமா.

வடிவேலா சிவன்பாலா நான்
வருந்தியழைக்கமனம் பரிந்துவருவாய் (வடிவேலா)

படிதனிலுந்தி புரியுமடியர்க்கருள்
பரங்கிரிவளர் முருகேசா உன்
பதமலர் தந்தருளீசா எனைப்
பாராயோ வரம் தாராயோ (வடிவேலா)

முனிபுகலருந்தினைப் புனமதில்குறமகள்
முகமலர்ந்தணைந்திடும் நாதா நிதம்
மூவர்கள்புகழ்ந்திடும் வேதா வா
முருகோனே மால் மருகோனே (வ)

விடமுறைக்கடைவிழி வனிதையரிட்சுக
மேவியநுதினமும் வாடி பொல்லா
வினைகள் பலவுமெனைக் கூடி நான்
வீணனேன் மனங் கோணுதே (வடி)

சரவணமதனிடை குருமணியெனவரும்
சமரசஷண்முக வீரா கவி
சாற்றுங்கருப் பண்ணணைக்காராய் இனி
சாதனை யேன்புவி யாதரனே (வடி)

உயர்வான விந்தியர்க் கன்னோடு தந்திரத்னுடு

தானே என்ற வர்னமெட்டு.

மகிழ்வோடுகந்துமயில் மீதிலேறுமுருகோனே என்
மனது கனியவே தந்தாள் பாதமலர் தானே

சிவ காமிபெற்ற குருநாதா
இச் சிறுவன் மீதிலினிவாதா
மா தவரதி சயமுறும் போதா
வர முதவிட வாலாகாதா (மகி)

அமராடிவென்ற சுரராவி கவருமதி காரா
அமரர்க ளரிய வேலேந்தி நின்றஉப காரா

குற மாமணிக் குகந்தமாரா
ஒரு கோதிலாத ரணசூரா
விர கோடுமேழை முகம்பாரா
வித மதுபுகன்றிடு முதாரா (மகி)

பகடேறிதென்றிசைக்காலன் வந்தணுகுமுன்னே
படுபழிகளழியவே கந்தாவென்றுமிதோசொன்னேன்

நின் பாலன்எந்தன் முறைக்கேளாய்
படி மீதில்நம்பி வெகுநாளாய்
வடி வேலனென்னு மலர்தோளா
இவ் வர்மமேனோ எணியாளாய் (மகி)

பரிவோடுசங்கரலிங்க பாஸ்கரசாமி
உனைப்பணிந்திடுஷண்முகதாஸ் மாம்பழவேல்சாமி

புக மூடுமலைவளர் முத்துசாமி
கவி புருட்னெனும் பழனிசாமி
செக மதிலவர்பதமணி நேமி
உன் சேயன் கருப்பண்ணசாமி (மகி)

பாரத மாதாபெற்ற பாலர்களே நமக்கு

என்ற வர்ன மெட்டு.

மாலாகிதினை புனத்தில் மாதுவள்ளியைமணந்த
வேலாமயூரமிசை வேகமுட னேடிவர

வேண்டினேன் குகனே தில்லை
தாண்டவன் மகனே (மாலாகி)

பூமாதணிந்தமுகில் மாமாயனுக்குகந்த
சீமானேசேவற்கொடி கோமானெனுங்குமர

செந்தில் முருகா வாரும்
சுந்திரமுருகா (மாலாகி)

பூலோகவாழ்வைநம்பி போகாத்துயரால்வெம்பி
சாலோகமளிக்கும்சிவ ஷண்முகாஉனைத்துதித்தேன்

சரவண பவனே வர
மருள்புரிபவனே (மாலாகி)

கருப்பண்ணசாமிக்கவி விருட்பாகவிந்தப்புவி
சிறப்பாயுன்னருளுதவி செய்வாயென்றனை தழுவி
சேவித்தேன் வருவாய் பத
மேவியே தருவாய் (மாலாகி)

மகம்மதியர் குலத்தில் மாணிக்கமாயுதித்த

என்ற வர்ணமெட்டு.

பாரோர்துதிக்குந் திருப் போரூர்தனிலெழுந்த
பக்தர்கொண்டாடுமுருகா நெடுமாலென்னும்
முத்தர்க்குண்டான மருகா எனைப்
பாரா யன்பொடு தாரா யுனதருள்
தீராயென்றுயர் சேராய் சந்ததம்
பாதம்தொழுதேனய்யனே என்னுளும்சதுர்
வேதம்புகழும் துய்யனே (பா)

செஞ்சொல் முனிபுகன்ற வஞ்சி மகிழ்ந்துதந்த
தேனுந் தினைமா உண்டவா சுனைக்கழைத்து
தோணுந் தண்ணீருட் கொண்டவா விழி

சேலா கும்மொழி பாலா கும்மிடை
நூலா கும்மவள் மாலா குங்குக
தேவர் சேனுதிபதியே எனைரக்ஷிக்க
மேவுங் கிருபா நிதியே (பா)

பொங்குமரவணிந்த சங்கரனும்பயின்ற
போற்று மறைக்கு மர்தியே விளங்கவுரை
சாற்றுமிகுத்த ஜோதியே திகழ்

போதா குஞ்சரி நாதா பங்கஜ
பாதா ஷண்முக வாதா ரந்தா
புள்ளிமயில்மீதேறிவாவா அடியனிடம்
துள்ளி விளையாடிடுந் தேவா (பா)

சாமிக் கருப்பண்ணனு நேமித் தனதடியில்
சந்தப்பா மாலை சூடினேன் உளங்கனிந்து
கந்தப்பா வென்று நாடினேன் மிக

சந்தோஷம்பெரவந்தாளுந்தனிந்தாயம்பிகைமைந்தாயின்னமும்
சோதிக்கலாமோசேவலா மலைமுனிக்குப்போதிக்கநேரும்பாவலா

கருணை தந்தாளம் மணி உன்கழல்பணிந்தேன்

கண்மணி என்ற வர்ன மெட்டு.

மாற்றுயர் வேல்முருகா சுரர்
மன்றுமொல் மருகா நிதம்
மாநிலந்தனிலே வருந்துயர் மாற்றிடச்செய்பருகா (மா)

ஷண்முக சிங்காரனே மறை
சாற்றிடுங் கெம்பீரனே கொடும்
சாதகப்பிடிவாதமிப்படி தானினிதேனவீரனே (மா)

மரகத மாமயிலா ஒப்பில்
மருவிடுஞ் செஞ்சேவலா எழில்
மாதங்கிசுத னுதனுங் கழல்
மீதடைந்தேன் பாவலா (மா)

கருப்பண்ணதாசன்றுதி மகிழ்
திருப்பரங்குன்றாரனே சண்ட
காலன்வந்தலங் கோலம்செய்திடும்
வேளைவந்தாள் துய்யனே (மா)

என்னகால மிந்தகாலம்.

வந்தருள்புரிவாய் நாதா
வாதிதோ மாமலர்ப்பாதா
சந்ததம்பணிந்தேன் நீதா
சார்ந்தெனையாளவொண்ணுதா ததியிது இனி வங்

சங்கரிமாதங்கிபாலா சரவணபவாசுசீலா
துங்கனேமறைவிசாலா சோதிசேர்செங்கதிர்வேலா அரகரசிவ ()

வஞ்சமேதரும்பூமீது வாடினேனுன்பலதீது
நஞ்சமோஎன்றுதியோது நாளெலாம்வினைதகாதுகடிகமழ்க

நாடியசூவாசையாலே நான்கெட்லானிக்காலே
தேடியேவந்தேனுன்பாலே தினமுனைக்காணுமன்பாலேகருதிட் [இனி (வரு)

தாசன்கருப்பண்ணன்நேராய் தரிசனம்பெற்றிட்வாராய்
நேசமாயுன்னருள்தாராய் நிகரிலாநீலமயூரா குருபரசிவ (வ)

விருத்தம்.

சீர்கொண்டெழுந்திலகு திருவேரகம்பழனி
திருமயிலைக் குன்றக்குடி
தேனுமிழ் ஸ்வாமிமலை கோசைநகர் கதிர்காமம்
திருவருளை ஞானமலையும்
பேர்கொண்டகொல்லிமலை கழுகாசலம் தணிகை
பேசரிய திருவொற்றியூர்
பேறைநகர் பொதியமலை தென்மயிலம் வள்ளிமலை
பெருமைபெறு கைலைமலையும்
நேர்கொண்ட கூடல்நகர் ஊதிமலை கழுக்குன்றம்
நேசர்புகழ் திருவேங்கிடம்
நின்றுவளர் சந்தண சோலைகமழ் செந்திலொடு
நிகரிலா திலகுமிறையே
தார்கொண்ட நரைகமழ் கடம்பணியுமார்பனே
தமயன்கருப்பண்ணனேத்தும்

தர்ப்பரா னந்தசிவ விர்ப்பன விசாலகுக
தண்டாயுதக் கடவுளே.

லோகமான்ய பாலகங்காதர திலகம் என்ற மெட்டு.

செந்தியில்மேவுங்கந்தா	சேவலங்கொடியா
சேயனைக்கார்த்திட	உனக்கொருநொடியா
தந்தைதாய்குருதெய்வம்	சகலமும்நீயே
தாங்கொணுதுயர்தனை	தவிர்த்தாளுவாயே (செ)

தொஹைறரா.

சத்ருசங்காரனே தனிமயில்வீரனே சமராடுவேல் முருகனே
மித்ரனுமெந்தனை வந்தாளுவாய்ததிமேதகுமலர்த் தோளனே

சங்கரியாள்புகழும்	சதிரா றுமுகனே
சாதுசர்ஜனர்பணி	சமர்த்துளகுகனே
மங்கைவள்ளிதெய்வானை	மருவிடும்சுகனே
மனமகிழ்ந்திடுமுராஹரி	மருமகனே (செ)

தொஹைறரா.

குரமாது தினைமாவைபரிவோடு தந்திட்கூட்டியேதின்றவாயா
சிரமேவுணங்கினேன்கனிவோடு வந்தருள்சித்தாதிகட்குநேயா

பிறந்துபிறந்துழலும் பிறவியைத்தீராய்
பிசகாயினும்என்துதி பிரியமாய்வாராய்
விரைந்துவிரைந்துமுனை வேண்டினேன்நேராய்
வி. க்ருப்பண்ணன்றமிழ் விளங்கிட்டப்பாராய் (செ)

ஈசா நீ கெதியே என்ற வர்ன மெட்டு.

சேனாதி பதியே சேவலா பதங்கெதியே சேனாதி
தேனார் கடம்பணிந்த தேசிகா குமாரதேவ சேனாதி
வானாடர்க் கருள்குகனே வர்மயாகுமா பரனே
கானுள்குறமான்சுகனே காதலாகினேன்குமரனே சேனாதி
சேயன்மீதேனிந்தவாதம் செய்வதுமாகாதகீதம்
நேயமாயுன்பாதப்ரசாதம் நேர்ந்திடேலாகும்ப்ரமாதம் சே
ஆலமுண்டோன்மகிழும்பாலா ஆதரிக்கவாரும்மூலா
காலன்வாதைதீரும்வேலா கார்த்திகேயனேசுசீலா சேனா
கருணைபெருகுமிந்த பூமி கருதுங்கருப்பண்ணசாமி
தருண மிதுவேபாரும் நேமி தாமத மேனோஎன் சாமி சேனா

சுருளிமலைமேவும் வடிவேலா என்ற மெட்டு.

குன்றக்குடிமீதிவளர் வோனே உன்னை
கோரிவந்தேன் வாருமுரு கோனே ஒரு

கோதிலா துமையளித்த சோதிசுடர்வேல்பிடித்த
கோனே குணவானே (குன்)

மலைமுனிக்குரைத்த குருநாதா இந்த
மாநிலத்திலெந்தன் றுதி தீகா துயர்
மாற்றிடக்கழல்பணிந்து போற்றினேனருள்தரவே
வாதா வரம் தாதா (குன்)

பச்சைமயிலேறு முருகேசா சூர
பாவையாள் தனக்குகந்த நேசா கண்ணால்
பாருமெனைப்பேருலகில் யாருமில்லை காரும்பவ
நாசா குமரேசா (குன்ற)

சத்துருசங்கார ரண சூரா மறை
தத்துவமுரைத்திடுங் கெம்பீரா உந்தன்
தாசன்கருப்பண்ணன்றமிழ் நேசமுடனுண்டிடு
முதாரா ஜெய மாரா (குன்)

சித்திரக் கட்டிலி லேறி என்ற வர்ன மெட்டு.

வெற்றிக்கதிர் வடிவேலா மத
வேளைக்காய்ந்த சிவன் பாலா சுசீலா (வெற்றி)

வேததுராந்தரியம்பிகை நீலிகுணம்பெருசண்டிகை
வாலைதிகம்பரிபைரவி யாளுமகிழ்ந்தினிதருளிய (வெற்)
வெகுண்டுகௌமதில்பட்டவே புகுந்துசமர்ஜெயமுறவிடு ()
வெம்புகின்றநெஞ்சுகந்து சஞ்சலந்துலங்குகின்றன் (வெ)

வேதாவாதாசததள பாதாநீதா ததியிது (வெற்)
வெகுவிதமுனிபுகலதிருண குரமகளிதமொடுதழுவிய
குகனெனுமகமதிமருகனே மரகதமயில்மிசைவருமெழில் ()
வேறினியார்துணை வேகமாய்வாராய்
வேண்டுங் கருப்பண்ணசாமியைக்காராய்
பாரினிலோதினேன் பாவமேதீராய்
பரிவுடனிரதமுங்கருதினேன் சரவணபவனெனுங்குருபர ()

நீயேதுணையாம் குருவே என்ற மெட்டு.

ஞானோபதேசம்தருவாய் புகழ்நவிலருமுருகா ஞா

மானோர்கரமதிலேந்து மயேசன்
மகிழ்ந்தடருமறை புகன்றகுருவே ஞா

வானோர்துயர்தவிர்க்க வேனேகளம்புகுந்தாய்
கானோமனந்தியங்க லானேன் மனங்கசிந்தாய்
நானிலமீதொரு பாதகனாயினும்
நீதயவாகியே ஆதரவாய்தநி ஞா

பாலோடினிக்கமொழி யாலோலமென்னவிழி
சேலோடிணைக்குறத்தி மாலாயிதங்களித்து
சேர்தினைமாதேன் வேர்பெற்றுண்டவா
நீர்சுனைசாடியே சார்புற்றுண்டவா ஞா

வேலாவிமலியருள்பாலா நமனவன்கைச்
சூலாயுதங்கொண்டெடுந்தன் மேலாகவந்தனுகில்

தோதக மாய்கவ வாதனைமீது
நாதனே உன்னினை வேதிப்போது ஞா

வாதாமனதுமிரங்காதா கருப்பண்ணன்சொல்
போதாமரைபுகழும் வேதாசலத்தில்வளர்
போகசுகாகுக யோகசம்பன்ன
வேகமதாகமயூரப்ரசன்ன ஞா

கனகசபாபதி தரிசனம் ஒரு நாள் என்ற மெட்டு.

பரங்கிரி வளர் திரு முருகனே யுனதருள்
பாராய் ஷண்முகனே
வரந்தருவாயென தினமுனைநாடினேன்
சிரங்குனிந்துன திரு பதமலர்சூடினேன் பர

பரமனுர்க்குரை தருஞ் சரவணபவனே
பாரிலுனதடியர் மருவிடுபவனே
அரவணை துயில்பெறு மரிமருமகனே
அயனைமுனிந்துசிறையிடுமதி சயனே பர

உளங்கனிந்தரிவையர் தரும்சுக போகம்
உசிதமுடனிரவும் பகலுங்கொக் கோகம்
விளங்கிடகாமதி லணிந்துசை யோகம்
விரும்பியேஉனதடி சினந்தேனென் பாகம் பர

இதம்பெறுமரகத மயில்மிசை யேறி
எதிர்படுமரக்கரின் படைகளைத் தூரி
சுதந்திரமுடன் கதிர்வேலுடன் மீறி
சுரர்க்கிடர்தவிர்த் திடுபவனேஇப் பாரில் பர

சமரசர்க்குருபர சிவமுருகா
தனயன்கருப்பண்ணனும் சார்ந்திடுமருகா
குமரனேயுன்மனங் கொடியதோரிருகா
குவாலயம்புகழ்ந்திடும் படிஎனதருகாய் பா

மாதாட பாரதேனே என்ற மெட்டு.

பார்த்தாளவேணும்சாமி பாரினிலெனைப் பார்த்
பூர்த்தகடம்பணிந்தபுனிதனே மறைநேமி பார்

ஆர்த்தலைங்கடல்துயில் ஹரிராகவன்மருகா
அருணனொளியிகழும் அழகாமனமிருகா
கார்த்தெனையாண்டிட கருணைபெருமுருகா
கவலையானுனைநாடிகதறினேனே யருகா பார்

கவனமுடனெனை தடரும்பவவினை
தவமச்செய்திடுபவனே உனைதினம்
காதல்கொண்டருகீதம் பாடினேன்
பூதலந்தனில்பாதம் சூடினேன் பார்

பூந்தளிர்திசைப்புன பூவைக்குகந்தமாரா
பூசுரன்சிறைபுகனு முதாரதீரா
சார்ந்திடுபவர்க்கருள் தானளிக்கும்கெம்பீரா
சரவணபவனெனுங் குமரனேகண்பாராய் பார்

தருணமிதுகுருபரனே யுனதடி
சிறுவனனுகினேன் கிருபைபுரிகுக
தாசன்கருப்பண்ணசாமி புகழ்துதி
பேசுந்திருத்தணிகா சலப்பதி பார்

கேளாதோ செவி என்ற வர்ண மெட்டு.

வாராயோகுகா என்னிடம் வாரா
வந்தாளெந்த னெஞ்சுமகிழ கொஞ்சியாடி வாரா

வரமருவே திரிபுரைதரு
சரவணபவசிவ குருபர வாரா

வனப்புண்டாகிய குரமகள்
தனைக்கொண்டாடிடு மதிபனே வாரா

வா துகளேபுரி மாதர்கள்
மீதிதமாகியே வாடினேன் வாரா

வந்துந்தனந்தம் பொற்
சந்தப்பத முந்தித்தா வாரா

வட்டக்கள முட்டிப்பகை
யிட்டக்குல மட்டிட்டவா வாரா

வானவர்க்கமுதிடு முராகரி
தானகமகிழ் வுறுமருகனே வாரா

நானுனையனுகிட இதுததி
மானலமதுதர சிகிமிசை வாரா

வஞ்சமேனேபுவி வாழ்வைநம்பினனே
வாலாயமாய் மனதேங்கினேன்பூமானே
தஞ்சமென்றேனடி தாருக்குணவானே
தாசன்கருப்பண்ணன் நேசித்திடுங்கோனே

தாவியே பணிந்திட்லாகினேன்
பாவினி லிணங்கி யாளவே வாரா

வேலனே இந்த வீணனை யேன்படைத்தாய்
என்ற வர்ன மெட்டு.

பாரிலே இந்தப் பாவியை யேன்படைத்தாய் நாளும்
பவசாகரமதிலேதிரிபவனாகிய முழுமூடனைப் பாரி

நாரிகளுரவினை நாடிமகிழ்கொண்டு
கலியேதரு மதகேளியி லிதமாய்கொடுமுழுமூடனை பா

வந்தமூ வாசையின் வாழ்வை சதமென்று
வாய்மதங் கொண்டு மதியாமல் புகன்று
அந்தகாரமென்னு மாகுலத்தில்நின்று
அரிதாகிய பரனேஉனை யணுகாதுறு முழுமூடனை பா

சூழ்வினையால்வந்த சூதான காயம்
துட்டாதகன்றிட சொல்லுமு பாயம்
பாழ்நரகெய்தாமல் பாரும் சகாயம்
படர்வேலையில் துயில்மாமுகில்
மருகாகெடு முழுமூடனைப் பாரி

ஆடுமரவமணிந்த சிவன் பாலா
ஆதரவேதினியாளும் குண சீலா
தேடுங்கருப்பண்ணசாமிக் கநு கூலா
தினைகாவலும்புரிமாகுற மகள்கோரிய குகனேயினி பாரி

மகாவிஷ்ணு பேரில்.

தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

ராமா ஸ்ரீராகவ ஜெய ராமா
வாமனு ஓ மாதவ ஹரி ராமா
நேமாஉனைத் தொழுதேன் நேயமுடனேயழுதேன்
நெடியவனே அரை நொடிதனில்
படியதில்வா தடையேனோ ஜெய ராமா

தொஹைறா.

காயாம்புமேனியா காகுத்தலகனே காமனையீன்றகோவே
வாயார உன்னுமம் வாஞ்சையோடேற்றினேன் வாதெலாம்
[விட்டு வருவாய்

வாராதிருப்பதிது சீராசுரர்க்கமுது
வள்ளலேதருங்கள்ளனே என
துள்ளமகிழவிள்ளுவேன் ஜெய ராமா

தொஹைறா.

அன்றுகோபியராடைஆவலா எடுத்ததோர்ஆயாசமேவிட்டதோ
குன்றையோர்சிறுவிரலில் குடையாய்பிடித்திடுங்கொள்கையால்
[மனம்விட்டதே

கோபாலனேமன்று கூடிஎன்முன்வருவாய்
குற்றமகற்றிட பக்தன்கருப்பண்ணன்
முற்றுமழைத்திடுங் கொற்றவனே ஜெய ராமா

விருத்தம்.

பூத்தொளிர் மதிமுன் ெனருசிறு மீன்போற்
புலமைநன் னூலறியாத
நேத்திர மில்லான் காண்டலைப் போல
நிகழ்த்திடு மறுமுக வேலன்
தோத்திர மென்றே பிழைபொறுத் திதனை
தொள்புவித் தனிற்றமிழ் வல்லோர்
காத்தெனை யாள நுமதடி பணிந்தேன்
கனிந்தருள் புரி புலவோரே.

வாழி விருத்தம்.

சீர்பெறுஞ் சேவல் வாழி செங்கதிர் வேலும் வாழி
நேர்பெறுமலும் வாழி நிகரிலாக்குமரன் வாழி
பார்தனில் கற்றோர் வாழி படிப்பவர் கேட்போர்;வாழி
பேர்பெறவச்சி விட்டோர் பெருகமென் மேலும்;வாழி.

கருப்பண்ணசாமி கீர்த்தனை.

முற்றிற்று.

விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் அறிவிப்பது யாதெனில் அடியில் கண்ட விலாசத்திற் இப்புஸ்தகமும் ராஜீயம் நூல், மதம், சமூகம், சங்கீதம், வைத்தியம், ஜோசியம், மாந்திரீகம், ஜாலம், மனோவசியம், மர்ம இரகசியங்கள், நூதன துப்பறியும் நாவல்கள், நாடகங்கள், பஜனைப்பாடல்கள், வாசிக்கவாசிக்க இனிக்கும் கொலைசிந்துகள் காவடிசிந்து புராணங்கள் ஸ்கூல்புஸ்தகங்கள், கணக்குபுஸ்தகம், பேரேடு குறிப்பு, முதலியதும் சவரன், வெள்ளி, வகைராகளும் நல்ல உயர்ந்த பிஸ்கட்டுகளும் ராந்தல், சிமிளி வகைராகளும் உயர்ந்த சோப்பு தினுசுகளும் பப்பெர்மெண்ட் வகைகளும் நல்ல பரிமளமுள்ள செண்டுவகைராகளும், அலிமெனியம், இனாமல், இன்னும் இதர சாமான்களும் விலைசகாயமாய் விற்கப்படும்.

வி. கே. வையாபுரி நாயக்கர்,

அலிமெனியம் ஆப்காரி கண்ராக்டர் ஷாப்பு, ஷர்ப

மெர்சண்ட் சங்கரா புரம்.

எஸ். ஐ. ஆர்.